**செ. கு. எண்: 186** **நாள்: 27.11.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 27.11.2017

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், பனப்பாக்கத்தில் இயங்கி வரும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11-ஆம் வகுப்பு பயின்று வந்த வேலூர் மாவட்டம், பனப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு தர்மலிங்கம் என்பவரின் மகள் செல்வி தீபா, திரு ரவி என்பவரின் மகள் செல்வி சங்கரி, திரு. குமார் என்பவரின் மகள் செல்வி ரேவதி மற்றும் திரு. பாலு என்பவரின் மகள் செல்வி மனிஷா ஆகிய நான்கு மாணவிகளின் சடலங்களும் மேலபுலம்புதூர் மதுரா ராமாபுரம் கிராமத்தில், தனியாருக்குச் சொந்தமான ஒரு கிணற்றில் 24.11.2017 அன்று கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

உயிரிழந்த நான்கு மாணவிகளின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேற்கண்ட நான்கு மாணவிகளின் இறப்பு குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**